கிறிஸ்துமஸ் நேரத்தில் இயேசுவை வரவேற்க நாங்கள் ஆவல் கொண்டுள்ளோம். குளிர்ந்துபோன எங்கள் இதயத் தொட்டிலில் அல்ல; ஆனால் அன்பும் பணிவும் நிறைந்த இதயத்தில், மிகவும் தூய்மையான, மாசற்ற, ஒருவருக்கொருவர் அன்பால் அரவணைக்கும் இதயத்தில் வரவேற்கிறோம்.

கொல்கொத்தாவின் புனித தெரசா

**இன்றைய இறைவார்த்தை:**

எசாயா 2:1-5

திருப்பாடல் 122: 1-2, 4-5, 6-9

உரோமையர் 13: 11-14

மத்தேயு 24: 37-44

வாங்குவதைவிட உடனிருப்பையும், வெறுமனே பார்ப்பதைவிட பரிந்துரையையும் தேர்ந்தெடுக்கும் ஓர் அடையாளங்களாக ஒன்றித்தப் பயணமாக குடும்பம் மாறும்.

புனித பவுல் இவ்வாறு கூறுகிறார், “உறக்கத்தினின்று விழித்தெழுங்கள், இயேசு கிறிஸ்துவை அணிந்துகொள்ளுங்கள், வெறுப்புக்குப் பதிலாக, மென்மையையும், கவனச்சிதறுலுக்குப் பதிலாக கவனத்தையும் மாற்றிக்கொள்ளுங்கள். சாதாரண நாட்கள் நம்மை மறதிக்குள் தள்ளக்கூடும் என்று இயேசு எச்சரிக்கிறார். நோவாவின் அண்டைவீட்டார் உணவு உண்பதிலும், திட்டங்கள் தீட்டுவதிலும் மும்முரமாக இருந்ததால் உரிய நேரத்தைத் தவறவிட்டனர்.

பெரும்பாலும் நாம் பயணம், பொருள்வாங்குவது மற்றும் திட்டங்களில் மூழ்கியிருக்கிறோம். அதேநேரத்தில் எதிர்பாராமல் சிலர் வெள்ள நிவாரணத் தேவைகள் மற்றும் புதிய ஆண்டின் சவால்கள் ஆகியவற்றின் தயாரிப்புகளில் சிக்கிக்கொள்கிறார்கள்.

எளிமை மற்றும் இணக்கத்தைப் பற்றி நமக்கு நினைவூட்டுவதோடு மட்டுமல்லாமல், திருவருகைக்காலம் சுற்றுச்சூழல் மாற்றத்திற்கான அழைப்பையும் நமக்குத் தருகிறது. லாவ்டாதோசி (217 “சுற்றுச்சூழல் நெருக்கடி ஆழ்ந்த உள்மாற்றத்திற்கான அழைப்பாகும்”) போல படைப்புகளையும் ஏழைகளையும் மதிக்கும் நன்றியுணர்வு, கட்டுப்பாடு மற்றும் மகிழ்ச்சி உணர்வை வளர்க்க இது நம்மை அழைக்கிறது. திருவருகைக்கால வளையத்தை சுற்றி மெழுகுத்திரி ஏற்றும்போது குழந்தைகள் பார்த்து வியக்கும் அளவுக்கு மெதுவாக, செய்யுங்கள். தனியாகக் காத்திருப்பவர்களை துணிவோடு எதிர்கொள்ளுதல், வீட்டிற்குச் செல்லமுடியாத புலம்பெயர்ந்தோர், யாரும் வந்து சந்திக்காத முதியோர், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு மீண்டும் தங்களைக் கட்டியெழுப்பும் குடும்பங்கள் ஆகியோருக்காக ஒரு மெழுகுத்திரியை ஏற்றுங்கள்.

நினைவுகூருதலுடன் தொடங்கிய இந்த மாதம், இப்போது தயாரிப்பின் மாதமாகிறது. செவிமடுக்கும் இல்லங்கள்; தேர்ந்து தெளிதல், பணிசெய்தல், இதனால் ஆண்டவர் வரும்போது, நாம் விழித்திருப்பதையும் ஒன்றித்திருப்பதையும் நாம் அவருக்கு கிடைக்கக்கூடியவராகவும் நம்மைக் காண்பார்.

**இந்த வாரம்:** ஒரு சிறிய இறைவேண்டல், ஒவ்வொரு வாரமும் ஒரு திட்டமிட்ட இரக்கச் செயல் போன்ற குடும்ப திருவருகைக் கால திட்டத்தைத் தொடங்குங்கள்.

INTERNAL CIRCULATION ONLY
BUL 48/2025

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org

# NEWBEC

NEW WAY OF BEING CHURCH | திருவருகைக் காலம் – முதல் ஞாயிறு | 30 நவம்பர் 2025

**எதிர்நோக்கிய திருப்பயணிகளாகக் கொண்டாடுதல், செவிமடுத்தல், மற்றும் பயணித்தல்**

மாதாந்திர நோக்கம் மற்றும் கருப்பொருள்: குடும்பம் (உடன் பயணம்)
கடவுளை மையமாகக் கொண்ட குடும்பங்களைக் கட்டியெழுப்புவதற்கான நம்பிக்கையையும் உறவுகளையும் வலுப்படுத்த அழைப்பு



# திருவருகை

## கடவுளை மையமாகக் கொண்ட குடும்பங்களுக்கான நம்பிக்கைப் பயணம்

நவம்பர் மாதத்தை நிறைவு செய்து முன்னோக்கிச் செல்கிறோம். திருவருகைக் காலம் நம்பிக்கையுடனும் பொறுமையுடன் எவ்வாறு காத்திருக்கவேண்டும் என்பதைக் குடும்பங்களுக்குக் கற்றுக் கொடுக்கிறது. இதனால் நாம் கடவுளின் எதிர்காலத்தில் ஒன்றிணைந்து நடக்கமுடியும். எசாயா இறைவாக்கினர், நாடுகள் ஆண்டவரின் திருமலைக்கு அவரது வழிகளைக் கற்றுக்கொள்ள ஓடிவருவதைக் கற்பனை செய்கிறார்.